www.tamilarangam.net

# தமிழீழ விடுதலைப் புலிகள்

# LIBERATION TIGERS OF THAMIL EALAM

## சிறீலங்கா இராணுவத்தை வெளியேற்றுவோம்

தமிழீழ மண்ணில் சிங்கள ஆளும் வர்க்கத்தையும், சிங்கள பெருந்தேசியவாத ஒடுக்கு முறையையும் கட்டிக்காக்கும் அரசு படைகளை அழித்தொழிப்பது எமது போராட்டத்தின் முக்கிய அம்சமாகும். அரசு படைகளின் மீதான இன்றைய இத்தாக்குதல் பரந்துபட்ட தமிழ் மக்களின் ஆதரவுடன் கூடிய எமது இயக்கத்தின் புரட்சிகர நடவடிக்கைகளின் தொடர்ச்சியாகும்.

கசாப்புக் கடைக்காரன் கத்தியைத் தானே கீழே போடமாட்டான். நாமே ஆவனசெய்யவேண்டும்; சிறீலங்கா இராணுவத்தை நாமே வெளியேற்றுவோம் என்பதற்கான செயற்திறனும், உறுதியும் எம்மிடம் உண்டு.

இந்த எமது நடவடிக்கைகளுக்கு, சினங்கொண்ட தமிழ் மக்கள் பின்னணித் தளமாக அமைகிறார்கள். மக்களின் கிளர்ச்சிகர உணர்வுகளின் வெளிப்பாடாக எமது ஆயுதப்போராட்ட நடவடிக்கைகள் அமைகின்றன. அதேசமயம் மக்களின் போராட்ட உணர்வுகள் வளர்வதற்கான உந்து சக்தியாகவும் அமைகின்றன.

> என்னைத் தூக்கிலிடுவன்மூலம் பல்லாயிரக்கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள். அவர்கள் என்னைப்போல் அப்பாவிகளாக இருக்கமாட்டார்கள். தமிழீழத்தை மீட்டெடுக்கும் வீரமும், தீரமும் மிக்கவர்களாகவே இருப்பார்கள்.
>
> — குட்டிமணி.

தமிழீழத்தை வென்றெடுப்பதற்கான சரியான பாதை எதுவென்பதை நடைமுறை அனுபவங்களிலிருந்து கற்று, போராட்டத்தை வழிநடத்தும் எமது இயக்கத்தின் பின்னே வீரமும், தீரமும் மிக்க போராளிகள் நிச்சயம் ஆயிரமாயிரமாக அணிதிரள்வார்கள். விடுதலைப் போராளி பிரபாகரனின் வழிகாட்டலில் நாம் தொடர்ந்து முன்னேறுவோம்.

**வெல்க தமிழீழம்!**

மத்திய குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்!**

---

வெளியீடு:- பிரச்சார வெளியீட்டு வாரியம், தமிழீழ விடுதலைப் புலிகள்.